සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

Third Term Test
තෙවන වාර පරීක්ෂණය - 2026
மூன்றாம் கால சோதனை

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 13 | විෂයය / பாடம் / Subject: **Economic** | පත්‍රය / வினாத்தாள் / Paper: II | පැය / மணித்தியாலம் / Hours: 3 |

**அறிவுறுத்தல்கள்:**

- உப பகுதி **"அ"** இலிருந்து ஆகக்குறைந்தது **இரண்டு** வினாக்களையும் உப பகுதி **"ஆ"** இலிருந்து ஆகக்குறைந்தது **இரண்டு** வினாக்களையும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## உப பகுதி "அ"

(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது **இரண்டு** வினாக்களை தெரிவு செய்க)

**01.** **(i)** பல தென்னை மரங்களைக் கொண்ட ஒரு சிறிய நிலத்தை சொந்தமாக வைத்துள்ள ஒரு விவசாயி தேங்காய் எண்ணெய் தயாரிப்பதற்கு திட்டமிடுகின்றான். இரண்டு தொழிலாளர்களை கூலிக்காக வேலைக்கு அமர்த்தியுள்ளார். குறிப்பிட்டளவான வரையறுக்கப்பட்ட வளங்கள் மூலம் வரையறுக்கப்பட்டளவில் தேங்காய்களை உற்பத்தி செய்துள்ள அவர் அவற்றை சந்தையில் விற்பனை செய்வதா அல்லது தேங்காய் எண்ணெய் தயாரிப்பதற்கு பயன்படுத்துவதா எனத் தீர்மானிக்க வேண்டியுள்ளாது. இறுதியாக அவர் அவற்றைச் சந்தைப்படுத்துவதற்குப் பகரமாக தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்த தீர்மானிக்கின்றான். அருமை, தெரிவு, புதுப்பிக்கத்தக்க வளங்கள் மற்றும் சந்தர்ப்பச் செலவு ஆகிய எண்ணக்கருக்களை, மேலே உள்ள சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு இனங்கண்டு விளக்குக. (04 புள்ளிகள்)

**(ii)** ஒரு பண்டத்தை அதிகமாக உற்பத்தி செயயும்போது அமையச் செலவு அதிகரிக் கின்றது. உற்பத்தி சாத்திய வளையியைப் பயன்படுத்தி இக்கூற்றையும் வளையியின் வடிவத்துக்கான காரணங்களையும் விளக்குக. (04 புள்ளிகள்)

**(iii)** பின்வரும் நிகழ்வுகளை உற்பத்தி சாத்திய வளையியில் காட்டி விளக்குக.

(அ) டித்வா" புயல் இலங பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்திய தாக்கங்கள்.

(ஆ) மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்த சூழல் இலங்கைப் பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம்.

(இ) இலங்கைத் தேயிலைக்கான கேள்வி குறைவடைந்தமை.

(ஈ) விவசாயத்துறையில் "ட்ரோன்" தொழிநுட்பம் பயன்படுத்தப்பட்டல். (04 புள்ளிகள்)

**(iv)** "சுய நலன்" என்பதே சந்தைப் பொருளாதாரத்தின் இயக்க சக்தி ஆகும். இக்கூற்றை உதாரணம் மூலம் விளக்குக. (02 புள்ளிகள்)

**(v)** கட்டளைப் பொருளாதார முறையின் பிரதிகூலங்கள் யாவை? (02 புள்ளிகள்)

**(vi)** நவீன பொருளாதார முறைமையில் சமூக முதலின் பங்களிப்பு யாது? (04 புள்ளிகள்)

**02. (i)** “பெற்றோலுக்கான விலை அதிகரித்த போதிலும் அதற்கான கேள்வி குறைவடையவில்லை” ஏன் என விளக்குக. (02 புள்ளிகள்)

**(ii)** பெற்றோலின் விலை மாற்றத்தக்குச் சமனாகவோ அல்லது அதனை விட அதிகமாகவோ அதனது நிரம்பல் தொகையை அதிகரிக்க முடியாமைக்கான பிரதான காரணங்கள் யாவை? (04 புள்ளிகள்)

**(iii)** “கல்விக்கான கேள்வி அதிகரித்தது. ஆனால் அதற்கான விலை வீழ்ச்சியடைந்தது.” இந்த சந்தை நிலைமையை ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

**(iv)** ஏனைய காரணிகள் மாறா நிலையில் “*x*“ பண்டத்தின் விலை மாறுவதனாலோ அல்லது “*y*“ பண்டத்தின் விலை மாறுவதனாலோ அல்லது நுகர்வோரது வருமானம் மாறுவ தனாலோ “*y*“ பண்டத்துக்கான கேள்வி அல்லது கேள்வித்தொகை மாற்றமடைவதை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| P *x* | வருமானம் (ரூபா) | P *y* | *y* பண்டத்துக்கான கேள்விÆ கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 24 | 50, 000 | 40 | 200 |
| 30 | 200, 000 | 36 | 300 |

“*y*“ பண்டத்துக்கான மூன்று பிரதான பண்புகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**(v)** போட்டிச் சந்தையொன்றில் விற்பனை செய்யப்படும் ஒரு பண்டம் தொடர்பான தகவல்கள் வருமாறு:

கேள்விச் சமன்பாடு: $Pd = 12 - \frac{1}{9} Q$

மிகைக் கேள்விச் சமன்பாடு: $Ed = 120 - 12P$

பின்வருவனவற்றைக் காண்க.

(அ) ந்தைச் சமநிலை யாது? (03 புள்ளிகள்)

(ஆ) சந்தைச் சமநிலையை வரைபில் காட்டுக. (03 புள்ளிகள்)

(இ) உற்பத்தியாளர் மிகையையும் சமநிலையில் நுகர்வுச் செலவையும் காண்க. (02 புள்ளிகள்)

**03. (i)** மீள முடியாத நலன் இழப்புக்கும் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சிக்கும் இடையிலான தொடர்பை வரைபடங்களைப்பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

**(ii)** அரசாங்க பெற்றோல் சந்தையில் மீண்டும் QR முறைமையை அமுல்படுத்துவதாகக் கொள்க. இதன் பொருளாதார விளைவுகளை விளக்குக. (04 புள்ளிகள்)

**(iii)** வளைகுடா பிராந்தியத்தில் நிலவும் யுத்த நிலைமை காரணமாக இறக்குமதி உள்ளீடு களினதும் இறக்குமதி உள்ளீடுகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பண்டங் களினதும் விலைகள் அதிகரித்துள்ளன. இவற்றின் விலைத் தளம்பல்களை கட்டுப் படுத்துவதற்கான உமது அபிப்பிராயங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**(iv)** ஒரு நிறைபோட்டிச் சந்தையில் விற்பனை செய்யப்படும் ஒரு பண்டம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

$Q_D = 27 - 3P$

$Q_S = -5 + 5P$

அரசாங்கம் இப்பண்டத்தின் மீது ரூபா 1.60ஐ அலகு வரியாக விதிப்பதாகக் கொண்டு பின்வருவனவற்றைக் காண்க.

(அ) சமநிலை மீதான தாக்கம்
(ஆ) உற்பத்தியாளர் மிகை மீதான தாக்கம்
(இ) நுகர்வோர் மிகை மீதான தாக்கம்
(ஈ) பொருளாதார மிகை மீதான தாக்கம்
(உ) மீள முடியாத நலன் இழப்பு (2 × 5 = 10 புள்ளிகள்)

**04.** சாவினி ஒரு கணனி தொழிநுட்பவியலாளராக ஷறிவினி' என்ற ஒரு கம்பனியில் பணியாற்றி மாதாந்தம் ரூபா 80,000 ஐ சம்பளமாகப் பெற்று வந்தார். தற்போது அவர் அக்கம்பனியிலிருந்து விலகி ஷபினுறி' என்ற பெயரில் ஒரு சப்பாத்து தயாரிக்கும் கம்பனியை ஆரம்பிக்க தீர்மானிக் கின்றார். அதற்காக தனக்கு வருடாந்தம் 10% வட்டி வருமானத்தைப் பெற்றுத்தருகின்ற வங்கி வைப்பாக ரூபா 500,000 ஐப் பயன்படுத்தவும் நான்கு ஊழியர்களை ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 30,000 வீதம் மாதாந்தம் செலுத்தி வேலைக்கமர்த்தவும் தீர்மானித்துள்ளார். இதன்படி அவரது கம்பனியின் செலவுத் தகவல்கள் வருமாறு:

| | |
|---|---|
| மூலப் பொருட்கள் | ரூபா 100,000 |
| மின்சாரம் | ரூபா 5,000 |
| கட்டட வாடகை | ரூபா 20,000 |
| போக்குவரத்து | ரூபா 10,000 |

சாவினி 100 சப்பாத்துக்களை ஒவ்வொன்றும் ரூபா 5,000 வீதம் விற்பனை செய்வதன் மூலம் குறைந்தபட்ச மாத இலாபமாக ரூபா 80,000 ஐப் பெற எதிர்பார்கின்றார்.

**(i)** பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.
(அ) நேர்ச் செலவும்இ நேரில் செலவும்
(அ) பொருளியல் இலாபமுமஇ கணக்கியல் இலாபமும் (02 புள்ளிகள்)

**(ii)** குறுங்கால எல்லைச் செலவு வளையிக்கும் சராசரிச் செலவு வளையிக்கும் இடையிலான தொடர்பை விளக்குக. ஏன் அவை 'U' வடிவத்தைப் பெறுகின்றன? (04 புள்ளிகள்)

**(iii)** அளவுத் திட்டச் சிக்கனங்களையும் அளவுத் திட்டச் சிக்கனமின்மைகளையும் தோற்று விக்கும் காரணிகள் யாவை? (04 புள்ளிகள்)

**(iv)** ஏன் நிறைபோட்டி நிறுவனம் ஒரு விலை ஏற்போனாகத் தொழிற்படுகின்றது? விளக்குக. (02 புள்ளிகள்)

**(v)** தனியுரிமைச் சந்தைக்கும்இ தனியுரிமைப் போட்டிச் சந்தைக்கும் இடையிலான வேறுபாடுகள் யாவை? (02 புள்ளிகள்)

**(vi)** "பொருளியல் வாடகையும் மாற்றல் கட்டணங்களும் உற்பத்தி காரணிகளின் நிரம்பல் நெகிழ்ச்சியில் தங்கியுள்ளன." பொருத்தமான வரைபடங்களைப் பயன் படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

**05.** **(i)** மூன்று வேறுபட்ட அணுகுமுறைகளின் கீழ் கணிப்பிடப்படும் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமதி ஏன் ஒன்றுக்கொன்று சமனாக அமைகின்றது? (04 புள்ளிகள்)

**(ii)** ஒரு கற்பனையான பொருளாதாரம் தொடர்பான பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடுக. (தரவுகள் பில்லியன் ரூபாவில்)

| | | |
|---|---|---|
| தனியார் நுகர்வுச் செலவு | 2 400 | |
| இருப்பு மாற்றம் | 560 | |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | 1 200 | |
| பெறுமதி மாற்றங்கள் | 450 | |
| அரசாங்கக் கொள்வனவுகள் | 2 200 | |
| ஏற்றுமதிகள் | 400 | |
| இறக்குமதிகள் | 600 | |
| தேறிய நேரில் வரிகள | 150 | (04 புள்ளிகள்) |

(iii) “மொத்த உள்நாட்டுச் செலவும் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் சமனாகும்” கருத்துரைக்க.
(04 புள்ளிகள்)

(iv) அரச துறையைக் கொண்ட ஒரு மூடப்பட்ட பொருளாதாரம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| சேமிப்புத் தொழிற்பாடு | S | = | -2 000 + 0.24 d |
| முதலீடு | I | = | 400 |
| அரசாங்கக் கொள்வனவுகள் | G | = | 160 |
| வரிகள் | T | = | 100 |

(அ) நுகர்வுச் சார்பைப் பெறுவதோடு 10,000 மில்லியன் ரூபா என்ற வருமான மட்டத்தில் நுகர்வுச் செலவைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சமநிலைத் தேசிய வருமான மட்டம் யாது? (02 புள்ளிகள்)

(இ) சமநிலைத் தேசிய வருமான மட்டத்தில் உட்பாய்ச்சல்கள் வெளிப்பாய்ச்சல் களுக்குச் சமனாகும் என்பதை நிறுவுக.
(02 புள்ளிகள்)

**(v)** சமநிலை வரவு செலவுத்திட்டப் பெருக்கி என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

### உப பகுதி "ஆ"

(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது **இரண்டு** வினாக்களை தெரிவு செய்க)

**06. (i)** பணத்தின் வெளியகப் பெறுமதி என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. அது எவ்வாறு பொது விலை மட்டத்துடன் தொடர்புபடுகின்றது. என விளக்குக. (04 புள்ளிகள்)

**(ii)** "பரிமாற்றச் சமன்பாடு என்பது ஒரு கணித ரீதியான விளக்கமாகும். பணக் கணியக் கோட்பாடு அதன் மீதே கட்டியெழுப்பப்பட்டுள்ளது." விளக்குக. (04 புள்ளிகள்)

**(iii)** ஒரு பொருளாதாரத்தில் ஒதுக்குப் பணமானது அதன் பணநிரம்பல் மீது நேர்கணியை அதன் பணநிரம்பல் மீது நேர்க் கணிய ரீதியானதும் பல்விரிவாக்கத் தன்மை கொண்டதுமான விளைவைக் கொண்டுள்ளது என விளக்குக. (04 புள்ளிகள்)

**(iv)** ஒரு வணிக வங்கியின் எளிமைப்படுத்தப்பட்ட ஐந்தொகை வருமாறு:
(தரவுகள் ரூபாவில்)

| **பொறுப்புக்கள்** | | | **சொத்துக்கள்** | |
|---|---|---|---|---|
| கேள்வி வைப்புக்கள் | 50,000 | | ஒதுக்குகள் | 8000 |
| மூலதனம் | 10,000 | | கடன்கள் | 48000 |
| | | | நிலையான சொத்துக்கள் | 4000 |
| | **60,000** | | | **60,000** |

சட்ட ரீதியான ஒதுக்கு வீதம் 10% எனின் வங்கி முறைமையின் மிகை ஒதுக்கு பூச்சியமாகும் வரை அது கடனாக்கம் செய்யும்போது பணநிரம்பல் மாற்றம் யாது?
(04 புள்ளிகள்)

**(v)** இலங்கை மத்திய வங்கி தனது குறிக்கோள்களை அடையும் விதத்தில் எவ்வாறு திறந்த சந்தை நடவடிக்கைகளைப் பயன்படுத்துகின்றது என்பதை விளக்குக.
(04 புள்ளிகள்)

**07. (i)** விலைப்பொறிமுறை எவ்வாறு வினைத்திறனை வழிநடத்துகின்றது என்பதனையும் தூண்டுகின்றது என்பதனையும் விளக்குக. (04 புள்ளிகள்)

**(ii)** வரிச் சுமைக்கும் வரி விதிப்பின் ஏதேனும் ஒரு தத்துவத்துக்கும் இடையிலான தொடர்பை விளக்குக. (04 புள்ளிகள்)

**(iii)** வீட்டுத் துறையின் உயர் வருமானம் பெறுவோரை இலக்காகக் கொண்டு வருமான வரி வீதங்களை அதிகரிப்பதன் பேரினப் பொருளாதார விளைவுகளை விளக்குக.
(04 புள்ளிகள்)

**(iv)** கட்டமைப்பு ரீதியான பாதீட்டுப் பற்றாக் குறையானது சுழல் பாதீட்டுப் பற்றாக்குறையை ஏன் மிகவும் பாரதூரமானது என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

**(v)** கடன் மறுசீரமைப்பு ஏன் இலங்கைக்கு முக்கியமானது என்பதை விளக்குக.
(04 புள்ளிகள்)

**08. (i)** ஒப்பீட்டு நன்மையும் முழு நன்மையையும் போட்டியின் நன்மையையும் ஒப்பீடு செய்க.
(06 புள்ளிகள்)

**(ii)** "பண்ட வர்த்தக மாற்று விகிதம் சாதகமடைந்தாலும் வருமான வர்த்தக மாற்று விகிதம் பாதகமடைந்தது" இது சாத்தியமா? (03 புள்ளிகள்)

**(iii)** "இலங்கையின் சர்வதேச வர்த்தகத்தின் போக்குக்கு ஏற்ப ஐக்கிய அமெரிக்க குடியரசு இலங்கைக்கு ஒரு பிரதான நாடாகும்." இறக்குமதிகளின் மூலங்களையும் ஏற்றுமதி சேருமிடங்களையும் அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றை நிறுவுக. (04 புள்ளிகள்)

**(iv)** பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை இரட்டைப் பதிவு எண்ணக்கருவுக்கு ஏற்ப நீர் எவ்வாறு இலங்கையின் சென்மதி நிலுவை அட்டவணையில் பதிவு செய்வீர்?

(அ) “தித்வா” புயலினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு அன்பளிப்பாக ஒரு தொகைப் பொருட்கள் கிடைக்கப்பெறல்.

(ஆ) இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ஒரு கடனைப் பெற்றுக் கொள்கின்றது.

(இ) இலங்கையின் டொலர் ஒதுக்கைப் பயன்படுத்தி நாணயத் தங்கத்தைக் கொள்வனவு செய்தல்.

(ஈ) சீனாவில் பணிபுரியும் நிமல் தனது சம்பளத்தை இலங்கையில் உள்ள தனது தாய்க்கு அனுப்புகிறார்.

(உ) மீள முடியாத நலன் இழப்பு (04 புள்ளிகள்)

**(v)** மத்திய கிழக்குப் பிராந்திய யுத்த சூழ்நிலை காரணமாக மசகு எண்ணெய்யின் விலை அதிகரித்துள்ளது. (03 புள்ளிகள்)

**09. (i)** பொருளாதார வளர்ச்சியானது ஒரு தொகை ரீதியான எண்ணக்கருவாக உள்ளபோது பொருளாதார அபிவிருத்தியானது ஒரு தர ரீதியான எண்ணக்கருவாகும். (04 புள்ளிகள்)

**(ii)** “பேணதகு அபிவிருத்தி” எனும் எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்துக. (04 புள்ளிகள்)

**(iii)** பொருளாதார வளர்ச்சியின் செலவுகள் யாவை? (04 புள்ளிகள்)

**(iv)** மனிதவள அபிவிருத்திச் சுட்டெண்ணின் பலமான அம்சங்கள் யாவை? (04 புள்ளிகள்)

**(v)** இலங்கை வறுமையை குறைப்பதில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் யாவை? (03 புள்ளிகள்)

**10. (i)** பொருளாதாரங்கள் புதுப்பிக்க முடியாத சக்தி வளங்களிலிருந்து புதுப்பிக்கக் கூடிய சக்தி வளங்களை நோக்கி நகர்வதன் பொருளாதார அனுகூலங்கள் யாவை? (04 புள்ளிகள்)

**(ii)** தற்போது நிலவிவரும் மத்திய கிழக்குப் பிராந்திய யுத்தத்தில் இலங்கைப் பொருளாதார வளர்ச்சி மீதான பொருளாதார தாக்கங்கள் யாவை? (05 புள்ளிகள்)

**(iii)** அரசுடைமை வணிக நிறுவனங்களின் செயற்பாடுகள் அண்மைய ஆண்டுகளில் ஒரு சாதகமான போக்கைக் காட்டுகின்றன. அரசுடைமை வணிக நிறுவனங்களின் மீதான பொதுவான விமர்சனங்கள் யாவை? (05 புள்ளிகள்)

**(iv)** “கடந்த சில வருடங்களில் அந்நிய செலாவணி ஒதுக்கம் இலங்கையில் அதிகரித்துள்ளது”

(அ) வெளிநாட்டு ஒதுக்குகள் என்பதனால் கருதப்படுவது யாது?

(ஆ) இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்குச் சொத்துக்களின் உள்ளடக்கம் யாது?

(இ) அந்நியச் செலாவணி ஒதுக்குகள் அதிகரிப்பதனால் இலங்கைப் பிரஜைகளின் வாழ்க்கைத் தரங்கள் மீதான சாதகமான விளைவுகள் யாவை? (03 புள்ளிகள்)